DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI.

CC-28/2023

Prosecution witness - PW 2

| | | |
|---|---|---|
| Name | : திரு.முகமதுநவாஸ்கான் | Caste: |
| Father's Name | : | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |

(A1 present. A2 to A4 absent. Petition filed and allowed.)
03.07.2025- 12.20 PM
<u>முதல் விசாரணை</u>:-

1. நான் மதினாநகரில் குடியிருந்து வருகிறேன். அ.சா.1 எனது மனைவி. எதிரிகள் எனது குடும்ப உறுப்பினர்கள்.

2. எனக்கும், ஆஜர் எதிரிகளான எனது குடும்பத்தாருக்கும் இடப்பிரச்சனை இருந்து வந்தது. கடந்த 10.03.2022ம் தேதி இரவு சுமார் 10.30 மணியளவில் நான் வீட்டில் இருந்தபோது எனது தங்கையின் கணவர் சதக், எனது தங்கையின் மகன் ரவி, எனது தம்பி முகமதுகனி, 2வது தம்பி உமரின் மனைவி ஹபிபா ஆகியோர் வந்தார்கள்.

3. சதக் என்பவர் கம்பால் என்னை நடுதலையில் அடித்தார். நான் கீழே விழுந்து விட்டேன். எனது தம்பி கனி என்பவர் பெரிய கம்பால் வலது முழங்காலில் சுமார் 10 தடவை தொடர்ந்து அடித்தார். ரவி என்பவர் என்னை காலால் மிதித்தார். என்னை அசிங்கமாக இவனை கொல்லாமல் விடாதீங்கடா தேவிடியா மகனே என்று பேசினார்.

4. ஹபிபாவும் என்னை தகாத வார்த்தையால் பேசினார். இவனை அடித்து கொல்லுங்கடா என்று சொல்லிக்கொண்டே கம்பால் எனது வலது காலில் அடித்தார். எனக்கு லேசான காயம்பட்டது.

5. எனக்கு தலை மற்றும் வலது காலில் ஏற்பட்ட காயத்தில் இரத்தம் வழிந்தது. சம்பவத்தை பார்த்த அருகில் இருந்த சாந்தா என்பவரும், அவரது மகனும் சண்டையை விலக்கி விட்டார்கள்.

6. பின்னர் முகமது கனி என்னைப் பார்த்து இன்றைக்கு தப்பித்து விட்டாய் இன்னொரு நாள் உன்னை கொல்லாமல் விடமாட்டோம் என்று மிரட்டி விட்டு எதிரிகள் சென்று விட்டார்கள். சம்பவம் குறித்து காவல் நிலையத்திற்கு தகவல் சொன்னோம். போலீசாரும் வந்துவிட்டார்கள்.

7. காயம்பட்ட என்னை 108 ஆம்புலன்ஸ் வாகனத்தின் மூலம் இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். நான் சுமார் 4 மாதங்கள் வரை அங்கு சிகிச்சை பெற்றேன். எனக்கு வலது காலில் ஏற்பட்ட காயத்திற்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டது.

8. எனது மனைவி காவல் நிலையத்தில் புகார் அளித்தார். மருத்துவமனையில் வைத்து போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை: –</u>

இல்லை.

ஓம்/S. சாது சிவ சுப்பிரமணியன்
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி